ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1742/27 - 2012 ජනවාරි 27 වැනි සිකුරාදා - 2012.01.27
1742/27 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. 40.

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்**

12 (2) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 12 (2) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படுகின்ற, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, திரவப் பெற்றோலிய வாயு (LPG) தொடர்பான உருக்கினால் ஆன உருளை (சிலிண்டர்) மற்றும் அதனுடன் தொடர்பான இணைப்பு உபகரணங்களும் அதனுடைய வீட்டுப் பாவனைக்குரிய பொருட்களின் இறக்குமதியாளர்கள், தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர் அல்லது வியாபாரிகள் கீழே நிரல்படுத்தப்பட்டுள்ள இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட உரிய நியமங்களை உறுதிப்படுத்தாமல் அவற்றை இறக்குமதி செய்யவோ அல்லது தயாரிக்கவோ அல்லது விநியோகம் செய்யவோ, அல்லது களஞ்சியப்படுத்தவோ அல்லது விற்பனை செய்யவோ அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ அல்லது விற்பனைக்காக வைக்கவோ அல்லது மொத்தமாகவோ அல்லது சில்லறையாகவோ விற்பனைக்கு கோரவோ முடியாது என பணிப்புரை வழங்குகின்றது.

| | | |
|---|---|---|
| 1. | எடுத்துச் செல்லக்கூடிய திரவப் பெற்றோலிய வாயுவுக்கான (LPG) 0. 5 லீற்றரில் இருந்து 150 லீற்றர் வரையிலான உலோகத்தினால் ஒட்டப்பட்ட உருக்குவாயு கொள்கலன்கள் | SLS 1178 |
| 2. | எடுத்துச் செல்லக்கூடியதும் மீள் நிரப்பக்கூடியதுமான திரவப் பெற்றோலிய வாயுவுக்கான பித்தளை ஓட்டிலான உருக்கு கொள்கலன்கள் | SLS 1303 |
| 3. | திரவப் பெற்றோலிய வாயுவுக்கான அமுக்க கட்டுப்படுத்திகளும் தன்னிச்சையான மற்றும் கருவிகளும் | SLS 1180 |
| 4. | திரவப் பெற்றோலிய வாயுவுக்கான நெளிகுழாய்கள் மற்றும் குழாய் தொகுதிகள் | SLS 1172 |
| 5. | திரவப் பெற்றோலிய வாயு கொள்கலன்களுடன் உபயோகிப்பதற்கான வால்வு பொருத்திகள் | SLS 1184 |

இப்பணிப்புரை 2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

2009, செத்தெம்பர் 30 ஆந் திகதிய 1621/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 30 ஆம் இலக்க பணிப்புரை இப் பணிப்புரையின் மூலம் இரத்துச் செய்யப்படுகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

ரூமி மர்சூச்,
தவிசாளர்.

கொழும்பு,
2012, சனவரி 25.

2 - 391/1